TABSME AOF FOR ONI

## விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்

எலக்ட்ரானிக் படிவத்தை நிரப்புதல்: டேப்லெட்டுகள் மற்றும் மொபைலைப் பயன்படுத்தி ஆக்ஸிஸ் பேங்க்கில் கணக்குத் துவங்குவதை நான்/நாங்கள் இதன்மூலம் உறுதிசெய்கிறேன்/செய்கிறோம். மற்றும் ஆக்ஸிஸ் பேங்க் லிமிடெட்டின் பணியாளர்/பிரதிநிதி ஐடி ______________________ ஐக் கொண்டுள்ள பணியாளர்/பிரதிநிதி____ அவர்களை எலக்ட்ரானிக் விண்ணப்பப் படிவத்தில் நான் வழங்கிய அறிவுறுத்தல்களின்படி என்/எங்கள் சார்பாக கணக்குத் துவங்குதல் விவரங்களை உள்ளிடுவதற்கு அங்கீகரிக்கிறேன்/அங்கீகரிக்கிறோம். எலக்ட்ரானிக் விண்ணப்பப் படிவத்தில் அவர் உள்ளிட்ட விவரங்களை நான்/நாங்கள் மதிப்பாய்வு செய்து, சரிபார்த்து, அது உண்மை, சரியானது மற்றும் தற்போதையது என்பதையும், எலக்ட்ரானிக் விண்ணப்பப் படிவம் தொடர்பாக மேலே குறிப்பிடப்பட்டுள்ள குறிப்பு எண், நான் விண்ணப்ப விவரங்களை மதிப்பாய்வு செய்து, சரிபார்த்து, உறுதிப்படுத்திய பிறகு உருவாக்கப்பட்டுள்ளது என்பதையும் உறுதிப்படுத்துகிறேன்/ உறுதிப்படுத்துகிறோம். எலக்ட்ரானிக் விண்ணப்பப் படிவமும், அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவமும் மேலே குறிப்பிடப்பட்ட விண்ணப்பப் படிவ எண்ணுக்கான கணக்குத் துவங்குதல் ஆவணங்களாக இருக்கும்.

நான்/ நாங்கள் (இந்தச் சூழ்நிலைக்கு, "நான்/நாங்கள்", "என்/எங்கள்" மற்றும் "எனது/எங்களது" ஆகியவை, கணக்குதாரர்கள் அனைவரையும் குறிக்கிறது) கீழ்கண்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளைப் படித்து புரிந்துகொண்டேன்/ கொண்டோம். இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் ஏதேனும் மாற்றங்கள் செய்யப்பட்டால், அவை www.axisbank.com என்ற இணையதளத்தில் மட்டுமே கிடைக்கும் என்பதையும் புரிந்து கொண்டேன்/கொண்டோம்.

**கணக்குத் துவங்குதல்/ சேவை விதி:** கணக்குத் துவங்குவது உள்ளிட்ட, அனைத்துச் சேவைகளும் நான் வழங்கிய விவரங்கள்/ஆவணங்களின் சரிபார்ப்புக்கு உட்பட்டவையாகும். இந்தக் கணக்கு துவங்கப்படாத பட்சத்தில், இந்தக் கணக்கில் நான்/நாங்கள் முதலில் ரூ. 20,000 அல்லது அதற்கு மேல் ரொக்கமாகப் பணம் செலுத்தியிருந்தால், அந்தத் தொகை எனக்கு டிடி/காசோலை அல்லது பிஓ வடிவத்தில் மட்டுமே திருப்பியளிக்கப்படும். பாகிஸ்தானைச் சேர்ந்த நிறுவனம் தனது செயல் திட்ட அலுவலகக் கணக்கிற்காகக் கணக்குத் துவங்க, ரிசர்வ் வங்கியின் ஒப்புதல் அவசியமாகும்.

தற்போதைய வாடிக்கையாளர் ஐடி: ஏற்கனவே வாடிக்கையாளர்களாக இருக்கும் பட்சத்தில், தங்கள் வாடிக்கையாளர் ஐடியை அறிவிக்காமல், புதிய வாடிக்கையாளராக விண்ணப்பிக்கும் பட்சத்தில், அத்தகைய சூழ்நிலைகளில்

எனக்கு/ எங்களுக்கு எந்த முன்னறிவிப்பும் இல்லாமல், அது முடிவெடுக்கும் முறையில் வாடிக்கையாளர் ஐடிகளை ஒருங்கிணைப்பதற்கான உரிமை வங்கிக்கு உள்ளது.

**சேவைகள்:** சேவைகள் அனைத்தையும் சிறந்த முயற்சியின் அடிப்படையில் ஆக்ஸிஸ் பேங்க் வழங்கும். எனக்கு/ எங்களுக்கு கிடைக்கும் சேவைகளின் முழுமையான பட்டியல் www.axisbank.com இல் கிடைக்கும்.

**கட்டணங்கள் மற்றும் கட்டண விதிப்புகள்:** கட்டண அட்டவணையிலும், www.axisbank.com இணையதளத்திலும் விவரிக்கப்பட்டுள்ளவாறு, எனது கணக்கு மற்றும் நான் பயன்படுத்தும் பிற சேவைகளுக்கான கட்டணங்கள் மற்றும் கட்டண விதிப்புகள் பொருந்தும். அவ்வப்போது பொருந்துகின்ற சரக்கு மற்றும் சேவை வரியும், பிற சட்டரீதியான வரிகளும் அனைத்து கட்டணங்கள் மீதும் விதிக்கப்படும்.

**கட்டணங்கள், கட்டண விதிப்புகள் மற்றும் சேவைகளில் மாற்றம்:** கட்டணங்கள், கட்டண விதிப்புகள், சேவைகள் அல்லது வட்டி விகிதங்களில் ஏதேனும் மாற்றம்/ நிறுத்தம் செய்யப்பட்டால் கடிதம்/ எஸ்எம்எஸ்/ இணையதளம்/ மின்னஞ்சல் அல்லது பிற வழிகளில் குறைந்தபட்சம் 30 நாட்களுக்கு முன்னரே எனக்குத் தெரிவிக்கப்படும்.

**வசூலித்தல்:** கட்டணம்/ கட்டண விதிப்புகளைச் செலுத்துவதற்குக் கணக்கில் பணம் இல்லை என்றால், வசூல் வருமானம் அல்லது ஏதேனும் வைப்புத்தொகையிலிருந்து இந்தக் கணக்கிற்கு வரும் தொகைகள் உட்பட, கிடைக்கக்கூடிய எந்தவொரு வரவையும் பயன்படுத்துவதற்கு ஆக்ஸிஸ் பேங்க்கை நான் அங்கீகரிக்கிறேன்.

**கணக்கு முடக்கம்:** வேறுவிதமாகக் குறிப்பிடப்பட்டால் தவிர, பின்வரும் சூழ்நிலைகளில் எனக்கு அறிவிப்புடன் எனது கணக்கை முடக்குவதற்கு வங்கிக்கு நான்/ நாங்கள் அங்கீகாரம் வழங்குகிறேன்/ வழங்குகிறோம். a. எனது கணக்கில் நெஃப்ட், ஆர்டிஜிஎஸ் போன்ற வழிகளின் மூலம் பெறப்படும் அனைத்து ரொக்கம், காசோலைகள், டிடிகள் மற்றும் பிற வைப்புகள்/ பரிவர்த்தனைகள் ஆகியவை, அவ்வப்போது பொருந்துகின்ற சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு இணங்காதவையாகவோ அல்லது அவற்றை மீறுவதாகவோ இருப்பதாக வங்கி சந்தேகித்தால், இந்தக் கணக்கை வங்கி முடக்கலாம், அத்தகைய வைப்புகள்/ பரிவர்த்தனைகளுக்கு நான்/ நாங்கள் பொறுப்பாக/பொறுப்பாளிகளாக இருப்போம். b. என்/ எங்கள் கணக்கு கறுப்புப் பணத்தை சலவை செய்யவோ அல்லது அங்கீகரிக்கப்படாத பணக் குவிப்புக்கான வழியாகவோ அல்லது ஏதேனும் சட்டவிரோதச் செயலுக்கான வழித்தடமாகவோ தவறாகப் பயன்படுத்தப்படுவதாக சந்தேகித்தால். (இந்தச் சூழ்நிலையில் எனக்கு/ எங்களுக்கு அறிவிப்பு செய்யப்படாது).

**கணக்கை மூடுதல்:** பின்வரும் சந்தர்ப்பங்களில், எனக்கு முன் அறிவிப்புச் செய்து, எனது கணக்கை மூடுவதற்கு நான் வங்கியை அங்கீகரிக்கிறேன்: a. கணக்கில் உள்ள இருப்பு 3 மாதங்கள் அல்லது அதற்கு மேல் பூஜ்ஜியமாக இருக்கும் சூழ்நிலையில்; b. எனது கணக்கிலிருந்து அதிக அளவில் மறுக்கப்பட்ட பேமெண்ட்கள் ஏற்படும் சூழ்நிலைகளில்; c. அவ்வப்போது ஏதேனும் நீதிமன்ற/ சட்ட/ ஒழுங்குமுறை அதிகாரிகளால் வழங்கப்படும்/ வழிகாட்டப்படும் ஏதேனும் ஆணை, அறிவுறுத்தல்கள், வழிகாட்டுதல்கள், உத்தரவுகளுக்கேற்ப வங்கி முடிவு செய்யக் கூடிய பிற சூழ்நிலைகளில்.

**பரிவர்த்தனைகள்:** நான் ஆக்ஸிஸ் பேங்க்கிற்கு வழங்குகின்ற இந்தக் கணக்கு தொடர்பான நிதிசார்/ நிதிசாராத ஏதேனும் அறிவுறுத்தல்கள் (எ.கா: காசோலை புத்தகம்/ கார்டு வழங்குதல், நிதிசார் பரிவர்த்தனைகள், தனிப்பட்ட விவரங்களைப் புதுப்பித்தல் போன்றவை) அந்த நேரத்தில் நடைமுறையில் உள்ள ஒழுங்குமுறை வழிகாட்டுதல்களின் அடிப்படையில், வங்கியால் குறிப்பிடப்படும் அங்கீகரிக்கப்பட்ட முறைகள் மூலம் மட்டுமே வழங்கப்படும். அங்கீகரிக்கப்பட்ட முறைகள் மூலம் பெறப்படாத அறிவுறுத்தல்களின்படி ஆக்ஸிஸ் பேங்க் செயல்பட வேண்டும் என்று எதிர்பார்க்கவில்லை. ஆனால், அசாதாரண சூழ்நிலைகளில் அத்தகைய வசதிகளை வழங்குவதற்கு தனது சுயாதீன விருப்பத்திற்கேற்ப செயல்படும் உரிமை வங்கிக்கு உள்ளது.

**சேனல் வசதி:** சேனல் சேவை வசதியைப் பெற விரும்பும் அங்கீகரிக்கப்படாத கையொப்பமிட்டவர், சேனல் பதிவு படிவத்தை பூர்த்தி செய்து, துணை ஆவணங்களுடன் சமர்ப்பிக்க வேண்டும்.

**காசோலைப் புத்தகம்:** ஒரு நிதியாண்டில் போதிய பணம் இல்லாமல் 1 கோடி மற்றும் அதற்கு மேற்பட்ட காசோலைகள் நான்கு முறை திரும்பி வரும் பட்சத்தில் அல்லது ஒரு காலாண்டில் போதிய பணம் இல்லாமல் 1 கோடிக்குக் குறைவான 8 காசோலைகள் திரும்பி வரும் பட்சத்தில் புதிய காசோலைப் புத்தகம் வழங்கப்படாது.

**டெபிட் கார்டு:** ஆக்ஸிஸ் பேங்க் வழங்கும் வசதிகள் அனைத்தும் www.axisbank.com இணையதளத்தில் வழங்கப்பட்டுள்ள குறிப்பிட்ட வழிகாட்டுதல்களுக்கு உட்பட்டது. கடவுச்சொற்கள், பின் எண்கள் அல்லது ஐடிகள்/ டிஎஃப் கனெக்ட் போன்ற முக்கியமான விவரங்களை நான் வெளியே தெரிவித்து, அதனால் நடைபெறும் மோசடிக்கு ஆக்ஸிஸ் பேங்க் பொறுப்பாகாது.

**டிஜி வெல்கம் கிட்:** விதிமுறைகளும், நிபந்தனைகளும் மற்றும் அர்ப்பணிப்புக் குறியீடு, டெபிட் கார்டு எம்ஐடிசி, நடப்புக் கணக்குத் தொகுப்புப் பிரசுரம் போன்ற பிற பிரசுரங்களும் கணக்குத் துவங்கியவுடன் எஸ்எம்எஸ் அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்பப்படும்.